[2005 செப்டம்பர் 22

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

14—

இரப்பர் கழகம்

***30227—டாக்டர் தே. குமாரதாஸ்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நட்டத்தில் இயங்கும் இரப்பர் கழகம் வனத் துறையில் இணைக்கப்படுமா?

(ஆ) இதற்காகும் மொத்தச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கும் இரப்பர் கழகத்தை வனத் துறையில் இணைக்கும் உத்தேசம் தற்சமயம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வணக்கத்திற்குரிய அம்மா அவர்களுடைய ஆட்சியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைகின்ற இரப்பர், உற்பத்தியாகின்ற இரப்பருக்காக அந்த மாவட்டத்திலே இரப்பர் தொழிற்சாலை வேண்டும் என்று வெகுநாளைய கோரிக்கை இருந்து வந்தது. அந்த மாவட்டத்திலே இருக்கிற அந்த இரப்பர் மரத் தொழிலாளர்கள் எப்போதும் போராட்டம் நடத்தி அரசுக்கு அதிகமான செலவுகளை ஏற்படுத்தி வருகின்ற காலகட்டத்தில் முந்தைய ஆட்சியில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்காத சூழ்நிலை ஏற்பட்டு, தொழிலாளர்கள் பல பேர் போராட்டங்கள் நடத்தி வந்த சூழ்நிலையை மாற்றி, இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே தொழிலாளர்களுக்குக் கோரிக்கையே இல்லாத ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, இரப்பர் கழகத்திலே அளவு கடந்த இலாபம் ஈட்டுகின்ற சூழ்நிலையை எய்தி இருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே இரப்பர் தொழிற்சாலையை அந்தப் பகுதியிலே அமைக்கப்படவேண்டுமென்கின்ற கோரிக்கையோடு, அந்தப் பகுதியில்

2005 செப்டம்பர் 22]

இன்னும் இரப்பர் அதிகமாக பயிரிடக்கூடிய பகுதிகள் இருக்கின்றன. எனவே, இப்போதுள்ள சூழ்நிலையில் அது நல்ல நிலையில் இருக்கின்ற காரணத்தினால், பயிரிடப்படவேண்டிய பகுதிகளிலே புதிதாக பயிர்செய்து இரப்பர் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 100 ஹெக்டேரில் இரப்பர் கன்று பயிரிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து அதிக ஹெக்டேர் நிலத்தில் பயிரிடுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தப் பகுதியிலே அதிகமாக இரப்பர் பயிரிடுவதன்மூலம் அரசுக்கு அதிகமான வருமானம் வருவதோடு மட்டுமல்லாமல், அதிகமான கூலித் தொழிலாளர்களுக்கு, இரப்பர் — பால் வெட்டுகின்ற மரம் வெட்டுகின்ற தொழிலாளர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியினை சொல்லி இன்னும் பயிரிட வேண்டிய பகுதிகளில் அதிகமாக, வேகமாக பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதிக ஹெக்டேர் நிலப்பரப்பில் இரப்பர் மரக் கன்றுகளைப் பயிரிட தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வஸ்ரீ காமராஜர் அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது இரப்பர் கழகம். அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சட்டபூர்வமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த உயர்திரு எம்.ஜி.ஆர். அவர்கள் அதை ஒரு கழகமாக மாற்றி இன்று மூவாயிரத்திற்கு அதிகமான பணியாளர்கள்

பணியாற்றி கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கழகத்தை மேலும் அபிவிருத்திபடுத்துவதற்கு, இரப்பர் வாரியத்தில் இன்று ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு தமிழக அரசிடம் 100 ஏக்கர் இடத்தை கேட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையிலே அவர்களுக்கு 100 ஏக்கர் நிலத்தை இந்த அரசு வழங்கி, மேலும் இந்த இரப்பர் கழகத்தை நல்ல ஒரு தொழில் ஸ்தாபனமாக மாற்றி, மேலும் அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்குமா, அதற்கான திட்டம் அரசிடம் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நட்டத்தில் இயங்கி வந்த அரசு இரப்பர் கழகம் இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய சீர்திருத்த நடவடிக்கையால் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. மேலும், இந்த அரசு இரப்பர் கழகம் அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நல்லவிதமாகச் செயல்பட்டு வருவதன் பயனாக இன்றைக்குத் தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

15—

பல்தொழில்நுட்பப் பயிலகம்

***7332—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, நரிக்குடி ஒன்றியத்தில், பல்தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS